# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 5 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 8**

**AUGUST 2021 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்

2021 ஆகஸ்ட் மாத பத்திரிகை செய்திகளை ஆகஸ்ட் மாதம் கடைசி வாரம் தான் எழுத தொடங்கினேன். காரணம் **பதில் அளிக்காமல்** என் முன் வைத்திருக்கும் உங்கள் கடிதங்கள், ஊழித்துக்கு **காணிக்கைகளை** காசோலை யாகவும் DDயாகவும், அனுப்பியவர்களின் **கடிதங்கள் தமிழ், ஆங்கிலம், மலையாளம்** போன்ற பாஷைகளில் எழுதப்பட்ட **கடிதங்கள்** பதில் எழுத முடியாமல் தேங்கிக்கிடக்கிறது. **ஆலோசனை களுக்காக** எழுதிய கடிதங்கள் (e-mail) மெயில்கள் ஒருபக்கம் **கட்டுக்கட்டாக** அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அத்தனைக்கும் நான் **பதில் எழுதவேண்டும்.**

**மற்றொரு பக்கம் தமிழ்** ஜாமக்காரனுக்கு **தனி செய்திகள்** தயாரிக்க வேண்டும். **மலையாள ஜாமக்காரன்** வாசகர்களுக்கு **தனியாக செய்திகள்** மாதா மாதம் தயாரிக்க வேண்டும். என் வாசகர்களுக்கு எந்த விதமான செய்திகள் தேவை என்று கர்த்தர் உணர்த்துகிறாரோ அவைகளை ஜெபித்து, **ஆவியானவரால் உணர்த்தப்பட்டு** எழுத வேண்டும். இத்தனை வேலைகளுக்கு மத்தியில்

தொலைபேசி வழி ஜெபம், **தொலைபேசி ஆலோசனை,** தொலைபேசியில் அல்லது **மொபைலில்** அழைப்பவர்களுக்கு ஆலோசனை கூறி ஜெபிப்பதில்தான் ஒருநாளில் **பெரும்பலான நேரங்கள்** செலவழிக்கப் படுகின்றன. கடிதம்மூலம் **பதில்** e-mail மூலம் **பதில்** எழுத நேரம் வேண்டும். இவைகளைவிட **மிகமிக பிரயோஜனமான நேரங்கள்** தொலைபேசியில் பேசி ஜெபிப்பது ஆகும்.

அந்த ஜெபங்களுக்கு கர்த்தரின் பதில் கிடைத்த உடன் சம்பந்தப்பட்டவர்கள் கர்த்தர் பதில்அளித்துவிட்டார், வியாதி சுகமானது, வியாதியஸ்தரை வீட்டுக்கு கொண்டு வந்துவிட்டோம் என்று அவர்கள் அறவிக்கும்போது மேலும் சிலர் **கடனுக்கு** விண்ணப்பித்தேன், **மகள் திருமணத்துக்காக** வீட்டை விற்கவம் வேண்டி ஜெபிக்க கேட்டுக்கொண்டவர்கள். 2½ வருடத்துக்குபின் **நல்ல விலைக்கு என் வீடு விற்கப்பட்டது** என்றெல்லாம் அவர்கள் அறிவிக்கும்போது, **பிரச்சனையின்** சமயத்தில் எப்படி பாரத்தோடு அவர்களோடு இணைந்து ஜெபித்தேனோ, அதேபோல **ஜெபத்துக்கு பதில் கிடைத்துவிட்ட செய்தியை** அறிவிக்கும் போது அவர்கள் மறந்துபோனாலும் நான் அவர்களை அழைத்து **குடும்பமாக** வீட்டில் அவரவர்கள் இடத்திலேயே நிற்கச்சொல்லி **மொபைலை ஸ்பிக்கரில் போட செய்துவிட்டால்,** அந்த வீட்டார் அனைவரும் என் ஜெபத்தில் **கலந்துகொள்ள செய்து** ஏற்கனவே ஏறெடுத்த ஜெபத்துக்கு **பதில் கொடுத்த** தெய்வத்தை, **சுகம்** கொடுத்த தெய்வத்தை **பணம்** கிடைக்கச் செய்த தெய்வத்தை அவர்கள் எல்லாரையும் வாய் திறந்து **துதிக்க செய்வேன்.** அவர்களோடு **நானும் இணைந்து** பதில் கொடுத்த **கர்த்தரை துதிப்பது** எத்தனை **சந்தோஷமாக இருக்கிறது** தெரியுமா? இதற்குதான் ஒவ்வொரு நாளிலும் அதிக நேரம் தொலைபேசி வழியாக ஜெபிக்க நேரம் செலவழிக்கப்படுகிறது, அதன் காரணமாக பலருக்கு தொலைபேசியில் என்னோடு பேச **லைன் கிடைப்பதில்லை.** ஜெபித்துக்கொண்டிருக்கும் போது **மற்றொரு போனில்** ரிங்டோன் அடிக்கும் அதை **என் மனைவி எடுத்து** நான் மற்ற போனில் ஜெபித்துக்கொண்டிருப்பதாக கூறி அவர்கள் போன் நெம்பரை எழுதி வைத்து பிறகு என்னிடம் காட்ட **நானே அவர்களை** அழைத்து விசாரித்து அவர்களுக்கு **பதிலோ ஜெபமோ ஆலோசனையோ** கூறுவேன். இதையெல்லாம் **நான் ஒருவனே செய்வதால்** சில சமயம் சரீரத்தில் சோர்ந்து போகிறேன். இந்த விஷயத்தில் என்னைத்தவிற வேறு யார் **பேசினாலும் எழுதினாலும்** மக்கள் திருப்தியடைவதில்லை. ஆகவே கூடியவரை நானே அவர்களுடன் **பேசி ஜெபித்துவிடுகிறேன்.** சில சமயம் என் மனைவி பேசி ஜெபிக்கிறார். இப்படித்தான் வெளியில் எங்கும் போகாமல் **வீட்டில் இருந்தபடியே** ஒவ்வொரு நாளையும் கடக்கிறேன். கொரோனா கிருமி **என்னை வீட்டில் அடைத்து வைத்திருப்பதால்** நிறைய பேருக்கு **ஜெபிக்க முடிகிறது.**

# இம்மாதத்திற்குரிய சிந்தனை விஷயம்

இயேசுவின் **இரண்டாம் வருகையும்,** அந்தி கிறிஸ்துவின் நெம்பராகிய 666 பற்றி மக்கள் கேள்விமேல் கேள்வி கேட்டு **கொரோனா தடுப்பு ஊசியை** 666 நெம்முடன் சம்பந்தப்படுத்தி **பயந்துகொண்டிருக்கிறார்கள்.**

கொரோனா **தடுப்பூசிக்கும்,** அந்தி கிறிஸ்துவின் 666க்கும் சம்பந்தமே இல்லை என்பதை முதலில அறிந்துகொள்ளுங்கள்.

☐ முக்கிமான ஒன்றை வாசகர் அறிய வேண்டியது **அந்தி கிறிஸ்து** என்பவன் யார்? அவன் **பிசாசு என்பதை** யாவருமே அறிவார்கள். இப்போது அந்தி கிறிஸ்து என்பவன் வந்துவிட்டானா? எங்கு இருக்கிறான்? . 666 என்ற நெம்பர் விஷயத்தில் பெரிய பெரிய வேத பண்டிதர்களும், பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களும் அவர்கள் பத்திரிகைகளும் மிக **தவறான செய்தியை** சபை மக்களுக்கு அறிவிக்கிறார்கள்.

**அந்தி கிறிஸ்து** Anti Christ என்ற சொல் வேதத்தில் **யோவான்** எழுதிய **நிரூபங்களில்** மட்டும் சுமார் 5 முறை எழுதப்பட்டுள்ளதை பார்க்க முடியகிறது. இதில் தமிழ் வேத புத்தகத்தில் **கடைசியாகவரும் கள்ள கிறிஸ்து** என்ற அர்த்தம்கொள்ளும் வகையில் குறிப் பிட்டுள்ளார்கள். ஆனால் மூல பாஷையிலும் **மலையாள மொழி பெயர்ப்பிலும்** மட்டும் சரியான அர்த்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது **எதிர் கிறிஸ்து** என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**கிரேக்க** மொழிபெயர்ப்பில் **ஆண்டி கிறிஸ்டோஸ்** Anti Christos என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அதன் அர்த்தம் **இயேசு கிறிஸ்வுக்கு எதிரானவன்** என்பது சரியான அர்த்தமாகும்.

☐ **குடும்பம்** உடைய கூடாது **விவாகரத்து** செய்யக்கூடாது என்பது **கிறிஸ்துவின் உபதேசம்** – ஆனால் **எதிர் கிறிஸ்து** கணவன் – மனைவி ஒத்துப்போகவில்லை என்றால் **விவாக ரத்து** செய்து மன சமாதானத்துடன் உன் இஷ்டம்போல் ஜீவிக்கலாம் என்று ஆலோசனை கூறுகிறான்.

**திருமணம்** மூலம்தான் ஒரு **பெண்ணும் – ஆணும்** சேர்ந்து வாழ வேண்டும் என்பது **கிறிஸ்துவின் உபதேசம்** – ஆனால் **திருமணத்துக்கு முன்பே** ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழலாம், **சரீர உறவும்** வைத்துக்கொள்ளலாம், அதோடு மட்டுமல்ல **திருமணம் ஆகாமலேயே** குழந்தையையும் பெற்றுக்கொள்ளலாம், அதன்பின் தேவையானால் **ஒருவருக்கொருவர்** தீர்மானம் எடுத்தால் 6 வருடம் கழித்தோ, 5 வருடம் கழித்தோ திருமணம் செய்துகொள்ளலாம். இதை **அரசாங்கமும்** அனுமதிக்கிறது. இதை **மனித உரிமை** என்கிறது. இவர்கள் திருமணம் செய்யும்வரை பள்ளிக்கூட சர்டிபிகேட்டில்

பிள்ளைகளுக்கு **அப்பா** பெயர் எழுதுவதில்லை. இதில் வெட்கக்கேடு என்னவென்றால் **கிறிஸ்தவ திருச்சபைகளும்** இதை அங்கீகரிக்கிறது. அப்படிப்பட்ட குடும்பத்துக்கு **திருவிருந்தும் கொடுக்கிறார்கள்.**

சமீபத்தில் ( பிராட்டஸ்டன்ட்) **கிறிஸ்தவர்களின்** உலக தலைமை பீடமான **லண்டன் கத்தீடரல்** தேவாலத்தில் **தலைமை பிஷப்** அவர்கள் **பிரிட்டன் பிரதமருக்கு நான்காவது மனைவியாக** ஒரு பெண்ணை பிஷப்பே திருமணம் நடத்தி வைக்கிறார். அந்த திருமணத்திற்கு பிரதமரின் **இரண்டாம் மனைவிக்கு** பிறந்த வாலிப பிள்ளைகள் **அப்பா** கலியாணத்தை பார்க்கவும் அதன்பின் **கலியாண பரிசாக** மகன்கள் **அப்பாவிற்கு மோதிரமும்** கொடுக்கிறார்கள். எத்தனை சீர்கெட்ட கிறிஸ்தவ தலைமை பிஷப். பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களுக்கு அமைந்தின்க்கிறார். பிரிட்டனில் உள்ள வாலிபருக்கு, **இளம் சந்ததிக்கு** பிரிட்டன் **பிரதமரின் சாட்சி** எத்தனை வெட்கங்கெட்ட நிலையில் இருக்கிறது.

இதை முழு உலக பிராட்டஸ்டன்ட் கிறஸ்தவ சபைகளும் பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள். **பிராட்டஸ்டன்ட் தலைமை பீட பிஷப்** இந்த **வெட்கங்கெட்ட** விவாகத்தை **எந்த வேத வசன அடிப்படையில்** நடத்தினார். அந்த திருமணத்தில் இந்த தலைமை பிஷப் **என்ன பிரசங்கித்திருப்பார்?** திருமண தம்பதிகள் விவாகத்தில் சபைக்கு முன் கூறும் **உடன்படிக்கையில் (ஓத்)** என்ன வார்த்தைகளை கூறி **சத்தியம்** செய்து கொடுத்திருப்பார்கள்.

**இதை ஐரோப்பிய கலாச்சாரம் என்று கூறி ஒதுக்க முடியாது.**

வேத புத்தகம் (யுனிவர்சல் (law) லா) **உலக சட்டம்** என்று கூறப்படுகிறது. வேத புத்தகத்தில் அடங்கிய சட்டங்கள் **அனைத்து உலகத்துக்கும்** அனைத்து விதவிதமான **கலாச்சாரத்துக்கும்** பொருந்தும் சட்டமாகும்.

பழைய ஏற்பாட்டின் ஆரம்ப காலங்களில் அனேக **மனைவிகளை** வைத்துக்கொள்வது தவறாக கருதப்படவில்லை. **தாவீது , சாலமோன்** போன்ற பெரும்பாலான கர்த்தர் நேசித்த ராஜாக்கள் பல மனைவிகளையும், வைப்பாட்டிகளையும் வைத்திருந்தார்கள். ஆனால் கர்த்தர் அதை அங்கீகரித்தார் என்று கூறக் கூடாது, உபா. 17:17ல் அவன் இருதயம் பின் வாங்கிபோகாதபடி அவன் **அனேக ஸ்திரிகளைப்படைக்க வேண்டாம்.** இஸ்ரவேல் ராஜாவுக்கு **ஒரு மனைவியை அல்லவா** படைத்தேன் என்றும் கர்த்தர் கூறுகிறார். மேலும் உலக ஆரம்ப காலத்தை **மனசாட்சியின்** காலம் என்பார்கள். ஆதாம் பெற்றது இரண்டு பிள்ளைகள்தான். ஆனால் பெண் பிள்ளைகளையும் ஆதாம் பெற்றான் என்று எழுதியிருக்கிறது. அந்த காலத்தில் **திருமணம்** என்ற ஏற்பாடு இல்லை. கூட பிறந்த சகோதர சகோதரிகளோடு உறவுவைத்து ஏராளமான சந்ததிகள் உருவானது. **காயின் காலத்தில்தான்** கணவன் – மனைவி என்ற உறவு வந்தது.

கர்த்தர் ஆதாமுக்கு **ஒரு ஏவாளைத்தான்** சிருஷ்டித்தார். இஸ்ரவேல் ராஜாவுக்கு **ஒரு மனைவியை** அல்லவா நான் நியமித்தேன் என்று கர்த்தர் கூறுவதை பழைய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். கடவுளின் இந்த சட்டத்துக்கு – எதிராக எத்தனை மனைவிகளையும் வைத்துக்கொள்ளலாம் என்பது **எதிர் கிறிஸ்துவின்** சட்டம். இதைத்தான் கிறிஸ்துவின் உபதேசத்துக்கு **நேர் விரோதமான** கொள்கைகளை, **உபதேசங்களை** மக்களை கைக்கொள்ள செய்வான்.

கர்த்தர் **அந்த பழத்தை சாப்பிடக்கூடாது** என்பார். ஆனால் பிசாசின் **எதிர் கிறிஸ்து சாப்பிடலாம்** என்பான்.

கணவன் மனைவி பிரிந்து வாழ்வது தேவனின் நோக்கமல்ல. ஆனால் **எதிர் கிறிஸ்து** பிரிந்து வாழ்வதில் தவறேதுமில்லை என்று உபதேசிப்பான். நம் **தேவன் பிரிக்கிற தேவன் அல்ல,** சேர்க்கிற தேவன்.

ஆகவே **இயேசு கிறிஸ்து** கூறிய உபதேசத்துக்கு **நேர் எதிராக** உபதேசிப்பவன் **எதிர் கிறிஸ்து.** இந்த (எதிர் கிறிஸ்து) **அந்தி கிறிஸ்துவானவன்** வெளிப்படும் வரை அவன் **பெயர் தெரியாது.** அவன்பெயர் தெரியாத வரை **666 எண்ணின்** கணக்கு தெரியாது.

அப்படியானால் எப்போது **எதிர் கிறிஸ்து** வெளிப்படுவான். இயேசு கிறிஸ்துவின் **இரண்டாம் வருகையில் சபை எடுத்துக்கொள்ளப்படும். சபை என்றால்** சபையில் **மனம் திரும்பி** இரட்ச்சிக்கட்ட **விசுவாசிகளை குறிக்கும்** சபையில் எத்தனை ஆயிரம் மக்கள் இருந்தாலும் **இரட்சிக்கப்பட்டவர்களை மட்டும்** கர்த்தர் எடுத்துக்கொள்வார். சபையில் மீதியுள்ள **மிக அதிகமான** இரட்சிக்கப்படாத விசுவாசிகள், **ஆயர்கள், பிஷப்மார், மாடரேட்டர்** யாவரும் கைவிடப்படுவார்கள்.

இரண்டாம் வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டவர்களை கர்த்தர் **ஆயிர வருட தம்முடைய ஆட்சியில்** இவர்களை வாழவைக்க என்று கொண்டுபோவார். அப்போதுதான் **எதிர்கிறிஸ்து** (அந்தி கிறிஸ்து) **வெளிப்படுவான்.** அப்போது அவன் பெயர் அறிவிக்கப்படும். கணக்கிட்டால் அதன் எண்ணிக்கை 666 ஆக வரும்.

இதற்குபின் பல சம்பவங்கள் இந்த பூமியில் நடைபெறும் அவைகளை வெளிபடுத்தின விசேஷத்தில் வாசித்து தெரிந்துகொள்ளுங்கள்.

666 எண்ணுக்குள்ள எதிர் கிறிஸ்துவை அறிந்து கொண்டபின் கையில் **சிப்** பதிக்கப்படும். 666 என்ற எண் அது நெற்றியிலாவது கையிலாவது பொறிக்கப்படவேண்டும.

ஆகவே 666க்கும் **கொரோனா தடுப்பூசி** போடுவதற்கும் சம்பந்தமேயில்லை.அந்தி **கிறிஸ்துவின் ஆட்கள்** உலகில் இயேசுவின் **சீஷர்கள்** உயிரோடு வாழ்ந்த காலத்திலேயே **ஊழியக்காரர்** வேஷத்தில் வந்து பெறுகிவிட்டனர்.

☐ நாம் உபயோசிக்கும் TV, **கம்ப்யூட்டர்** விதவிதமான **மொபைல்** Youtube, Whatsapp இப்படிப்பட்ட **நவீன சாதனங்கள்** யாவும் **எதிர்கிறிஸ்து** வருவதற்கான முன் ஆயத்த பொருகள்தான் ஆனால் அவைகளை நாம் யாவரும் **உபயேகித்துத்தானே** ஆகவேண்டும். அவைகளை ஒதுக்க நம் யாராலும் முடியாது.

இந்த **பிசாசின்** நவீன உபகரணங்கள் யாவும் பிசாசின் (அந்தி கிறிஸ்துவின்) **ஆயத்த கருவிகள்** என்றாலும் கர்த்தருடைய பிள்கைள் **அவன் பொருளை** உபயோகித்து அவனுக்கு **விரோதமான** ஆவிக்குறிய காரியங்களை. அதன் மூலம் மக்களுக்கு **போதிக்கலாம்.** பட்டி, தொட்டிகள், கிராமங்கள் காடுகளில் உள்ள மக்களுக்கு அதன் மூலமாக **இயேசு கிறிஸ்துவின்** சுவிசேஷம் அறிவிக்கலாமே !

ஊழியர்கள் **மிஷனரிகளை** மத தீவிரவாதிகள் அனுமதிக்காத இடங்களுக்கு, **வீடுகளுக்கு,** கிரமங்களுக்கு **மொபைல் மூலமாக** zoom வழியாக **அற்புதமாக சுவிசேஷம் அறிவிக்கலாம்.** பைபிள் ஸ்டடி நடத்தலாம்.

இது பிசாசின்நவீன கருவிகள் ஆகும். ஆகவே அதை நான் **தொடவே மாட்டேன்** என்றால் எப்படி? அவனடைய நவீன கருவியான லே டாப்பை பைபிளுக்கு பதில் கையில் வைத்துக்கொண்டு தான் இன்று **பெரும்பாலான ஊழியர்கள்**, ஆயர்கள் பிரசங்கம் செய்கிறார்கள்.

கர்த்தர் வெறுக்கிற **விக்கிரக வணக்ககாரனும்** பெலிஸ்தியனுமான **கோலியாத்தை** கொல்ல **தாவீது** கூழாங்கல்லினால் ஒரே அடியில் விழவைத்து கீழே விழுந்த **கோலியாத்தின்** மேல் தாவீது அமர்ந்து **அவனது நீண்ட வாளை எடுத்து** கோலியாத்தின் தலையைவெட்டி எடுத்தானே! **கோலியாத்** கர்த்தர் வெறுக்கிற ஆள்தான், ஆனால் **அவன் வாளையே** எடுத்து அவனை வெட்ட அதை தாவீது உபயோகிக்கிறான். அதுபோல **பிசாசின்** எல்லா நவீன கருவிகளையும் கர்த்தருடைய ஊழியத்துக்காக உபயோகிப்பதில் தவறல்லை. நம்மை கர்த்தர் **இரண்டாம் வருகையில்** எடுத்துக் கொள்ளும் வரை **பிசாசின் நவீன** கருவிகளை உபயோகிப்பது மிக முக்கியம். அதில் தவறேதும் இல்லை.

சகல ஆவிக்குரிய ஆயத்தத்தோடும் இயேசுவின் இரண்டாம் வருகையில் இயேசுவை எதிர்கொள்ள ஆயத்தமாவோம். ஒரு வேளை கர்த்தரின் வருகைக்கு முன் நம் **மரணம்வருமானால்** ஒவ்வொரு நிமிடமும் எச்சரிக்கையோடும் **சாட்சியோடும்** வாழ்ந்து **மரணத்தை** பயம் ஏதும் இல்லாமல் இயேசுவை **எதிர்கொள்ள** நாம் ஆயத்தமாவோம். கர்த்தருடைய கிருபை நம் எல்லாருடனும் நிலைத்திருப்பதாக.

☐ ங்கள் அனுப்பிய காணிக்கைகளும், உங்கள் ஜெபத்துக்கும் மிகவும் நன்றி கூறுகிறேன். வாசகர்கள் அனைவருக்காகவும் தொடர்ந்து ஜெபிப்பேன். – டாக்டர் **புஷ்பராஜ்**

# சபைக்கு சாபமானவர்கள்

(ரோமர் 16:17-20)

**Rev. John Raja**

**ரோமருக்கு** எழுதின நிருபத்திற்கு **முடிவுரை** எழுதுவது அப்போஸ்தலனாகிய **பவுலுக்கு கடினமாக இருந்தது** என்று **வில்லியம் பார்கலே** என்ற வேத விரிவுரையாளர் கூறுகின்றார். இந்த நிரூபத்தில் 16ம் அதிகாரம் 16ம் வசனத்திலே **பரிசுத்த முத்தத்தோடு** ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள் என்று கூறியவர், அதற்கு அடுத்த வசனத்தில் **சபையில் பிரிவினைகளையும் இடலறல்களையும்** உண்டாக்கியவர்களை குறித்து அறிவித்து அவர்களிடம் எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு **விலகவேண்டும்** என்றும் புத்தி சொல்கின்றார். இது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒருவருக்கொருவர் **பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்** என்று கூறிய **பவுல்** உடனடியாக **திருச்சபையில் பிரச்சனைக்குரியவர்களை விட்டு விலகுங்கள்** என்று எச்சரிக்கிறார். பொதுவாக கடிதம் எழுதுபவர்கள் **துவக்கத்தில்** வாழ்த்துதல்களையும **நடுவில்** உபதேசம் அல்லது புத்திமதிகளையும் **இறுதியிலே** ஆசீர்வாதம் மற்றும் தங்கள் **அன்பையும்** வெளிப்படுத்தி எழுதுவார்கள். ஆனால் **பவுல்,** ரோமர் நிரூபத்தில் **இறுதியாக எச்சரிப்பை கூறி** திருச்சபைக்கும் **ஒற்றுமைக்கும் ஒருமைபாட்டிற்கும்** பங்கம் விளைவிக்கும் குறிப்பிட்ட சிலர் மீது அவர்களது **பார்வையை பதிக்கும்படி** கூறுகிறார்.

பவுலின் **இறுதி செய்தி** ஒரு **மிக முக்கியமான செய்தியாகும்.** ஏனெனில் ஒவ்வொரு **திருச்சபையும்** இத்தகைய பிரச்சனையை **சந்தித்து வருகிறது**, அல்லது **சந்திக்க உள்ளது.** எந்த ஒரு சபையும் இதற்கு விதிவிளக்கல்ல, திருச்சபையை நிர்வகிப்பதிலேயே ஒத்த கருத்து இல்லாமல் எத்தனை சபைகள் **உடைந்தும், உலர்ந்தும்** போயிருக்கின்றன. எத்தனை **போதகர்கள்** தனிப்பட்ட வாழ்விலும் **ஊழியத்திலும்** வேதனையையும், **விரக்தியையும்** அடைந்துள்ளனர். **சண்டைகள்** எப்போதும் ஜனக்கூட்டத்தை ஈர்ப்பதினால் சில சபைகள் நிறம்பி வழிகின்றனர். Conflicits always draws crowd.

சபையின் பிரச்சனைகளுக்கும் **பிரிவினைகளுக்கும்** காரணம் என்ன ? சில பரிசுத்தமில்லாத இரட்சிக்கப்படாத மக்கள் **திருச்சபையில் நுழைந்து ஆதிக்கம்** செலுத்த முயற்சிப்பதேயாகும். இன்று திருச்சபையில் அங்கம் வகிப்பவர்கள் எல்லாருமே **ஒரே நோக்கத்தோடு** தேவனை ஆராதிக்கும்படி **ஐக்கியம் கொள்ளும்படி கூடி வருவதில்லை.** மனித சுபாவமான **சுயநலத்தோடும்,** சொந்த **எதிர்ப்புகளோடும்** அங்கம் வகிப்பதினால்

தங்களது வாழ்வை **தொலைத்துபோடுவது** மட்டுமல்ல, சபைக்கு **சாபமாயும் காணப்படுகிறார்கள்.** இதை நான் கூறும்போது எந்தவொரு தனி மனிதனையோ அல்லது திருச்சபையையோ மனதில் கொள்ளாமல், அனைத்து இடங்களிலும் காணப்படும் உண்மையைத்தான் கூறுகிறேன். தங்கள் **வியாபார அபிவிருத்திக்காக,** புதிய **பயனாளிகள்** கிடைக்க, தங்களுடைய செல்வாக்குக்காக, குறிப்பாக **அதிகாரம் செலுத்துவதற்காக** வேலைவாய்ப்புக்காக **திருமணம்** மற்றும் **மரண உதவி** மற்றும் **சலுகைக்காக,** இன்னும் பிற காரணங்களுக்காக சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

இப்படிப்பட்ட பரிசுத்தமில்லாத இரட்சிக்கப்படாத நோக்கங்களோடு அதாவது **தேவனின் நோக்கமில்லாத** மக்கள் சபைகளில் காணப்பட்டு, சபைக்கு ஊருவிளைவிக்கும் செயலைத்தான் **பவுல் தனது ரோமர் நிருபத்தை முடிக்கும் தருவாயில்** நினைவு கூர்ந்து **எச்சரிக்கிறார்.** பல **திருச்சபைகள் நன்றாக துவங்கியதையும். இறுதியில் காணாமற் போனதையும்** பவுல் நன்கு அறிந்திருக்கிறார். சில திருச்சபைகள் **வாக்குவாதங்களில்** ஈடுபட்டு, கிறிஸ்துக்காக வாழும் வல்லமையை இழந்திருக்கின்றன. **தவறான உபதேசம்** மற்றும் **கொள்கைகளால்** கிறிஸ்துவை விட்டே விலகிக் காணப்படுகின்றன.

இது இன்னும் காணப்படுகிறதா? ஆம் இன்னும் காணப்படுகிறது.

இது என் திருச்சபையில் காணப்படக் கூடுமா? ஆம் காணப்படக்கூடும்

ஒருவேளை உங்களது திருச்சபையில் தற்போது மிகப்பெரிய **பிரச்சனை ஏதும் இல்லாமல் இருக்கலாம்.** உங்களது திருச்சபையிலுள்ளவர்கள் **கர்த்தரை நேசிப்பவர்களாகவும்,** கர்த்தருடைய **வார்த்தையை** நேசித்து **கீழ்படிபவர்களாகவும் மற்றவர்களை நேசித்து** ஆதரிப்பவர்களாகவும் காணப்படலாம். திருச்சபைக்கு வெளியேயும் **இந்த அன்பை பகிர்ந்துகொள்பவர்களாகவும்** கானப்படலாம். **இப்படிப்பட்ட திருச்சபைக்காக** முழங்காலில் நின்று **ஆண்டவரைத் துதியுங்கள்.** உண்மை என்வெனில் இப்படிப்பட்ட குணநலன்களும் செயல்பாடுகளும் கொண்ட திருச்சபையைக் காண்பது அரிது.

1. **ஜாக்கிறதையாக இருக்க அழைப்பு**

அன்றியும் சகோதரரே **நீங்கள் கற்றுக்கொண்ட** உபதேசத்திற்கு **விரோதமாய்ப்** பிரிவினைகளையும் **இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து** எச்சரிக்கையாய் இருந்து **அவர்களை விட்டு** விலக வேண்டுமென்று உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன். வ.17

பவுல் **எச்சரிக்கையாயிருந்து** என்று கூறும் போது சபைக்கு வெயியே உள்ள மக்களைக்குறித்து கூறாமல் **சபைக்குள்ளேயே பிரச்சனைகளை** ஏற்படுத்தும் மக்களைக்

குறித்தே பேசுகிறார். இவர்கள் திருச்சபையில் **அங்கத்தினர்களாகவோ,** ஞாயிறுபள்ளி **பொறுப்பாளர்களாகவோ,** பாடகர் **குழுவினராகவோ,** வாலிபர் **இயக்கத்தினராகவோ,** கமிட்டி **உறுப்பினர்களாகவோ,** திருச்சபையில் **முன்னாள் பொறுப்பு** வகித்தவர்களாகவோ இருக்கக்கூடும். **இவர்களுக்குள்ளே** மறைந்து கிடக்கும் **தீமையே,** சபைக்குள்ளே பிரச்சனைகளை ஏற்படுத்துவதாக உள்ளது. **இப்படிப்பட்டவர்களை அடையாளமிடுங்கள்** என்று ஆங்கில வேதாகமத்தில் (KJV - Mark than that cause divisions) கூறப்பட்டுள்ளது. நம் சரீரத்தில் **வியாதியின்போது. ஏற்படும் மாற்றங்களைக் கவனித்து** செயல்படுவதுபோல, சபைக்குள் பிரச்சனைகளையும் பிரிவினைகளையும் **ஏற்படுத்தும் மக்களை** கவனியுங்கள் (watch out) என்றும் **அடையாளமிடுங்கள்** என்றும் பவுல் கூறுகின்றார்.

வேதாகமம் **சபையை அழித்து போடும்** Church - wrechers **மக்களைக் குறித்துக் கூறுகிறது.**

**டக்ளஸ் வில்சன்** என்பவர் யாக்கோபு 4:1-6 வசனங்கள் அடிப்டையாகக் கொண்டு கூறும்போது **பிரச்சனையின்** அடித்தளமே பொறாமை என்கிறார். அதாவது தவறான வழியில் திசை திருப்பப்பட்ட விருப்பங்களை என்கிறார். நம்மிடத்தில் இல்லாத ஒன்றை நாம் விரும்புகிறோம். ஆட்சி **அதிகாரம் பதவி** அங்கீகாரம் போன்றவற்றை நாம் விரும்புகிறோம். திருப்தி இல்லாத சபை மக்கள் செய்வது என்ன ? மற்றவர்களைப் பற்றி **புறங்கூறுதல், வம்பளத்தல்,** வேலையின்றி **மற்றவர்களைக்குறித்து விவாதித்தல்,** உண்மையற்ற செய்திகளைப் பரப்புதல், அடுத்தவரை சண்டடைக்கு இழுத்தல், சபையின் காரியங்களில் **ஒத்துழைக்காமல் இருத்தல்,** அடுத்தவருக்கு **மூளையாக செயல்படுதல்** போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இது எப்படியெனில் பொறியில் சிக்கிக்கொண்ட எலி, தன்னை விடுவித்துக்கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகளைப் போன்றதாகும். சமய அரசியலில் பொறாமை மிகப்பெரும் பங்கு வகிப்பதாக டக்ளஸ் கூறுகின்றார். **பொறாமை** பல ரூபங்களில் வெளிப்பட்டு பரிசேயர்களை போல செயல்பட வைக்கும்.

பாரம்பரியத்தின் மீது உண்மையான வைராக்கியம் கொண்ட மக்களைப்போல ஆவிக்குரிய சீற்றத்தோடும் ஏழைகள் மீது மிகுந்த கரிசனம் கொண்டவர்களாகவும் சபையின் ஒழுங்குகளில் நெறி தவறாதிருப்பவர்களைப் போலவும் **அருட்பணி (மிஷனரி) பாரம்** உள்ளவர்களைப் போலவும் சமயத்திற்கேற்ப அல்லது சூழலுக்கேற்ப தங்களை பல ரூபங்களில் இவர்கள் இவற்றை எவ்வளவு விரைவாக வெளிப்படுத்துகிறார்களோ, அவ்வளவு விரைவாக அவற்றையே குழப்பத்திற்கும் பிரிவினைகளுக்கும் காரணமாக்கி கொள்வார்கள்.

இவர்களுக்கும் ஆண்டவர் இயேசுவின் நாட்களில் வாழ்ந்திருந்த **பரிசேயர்களுக்கும்** வித்தியாசம் அதிகமில்லை.

மேலும் சபையில் பிரச்சனையை ஏற்படுத்தும் வேறு சில மக்களைக் குறித்தும் பவுல் கூறுகின்றார். இடத்திற்கு இடம், **சபைக்கு சபை,** பிரச்சனைகள் **வேறுபட்டாலும்** சண்டையிடும் மக்கள் **பொதுவான பண்புகளையே** கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக

1) இவர்கள் ஏற்கனவே **தவறு** இழைத்த அல்லது **குற்றப்பின்னணியத்தை** உடையவர்களாக இருப்பார்கள். மகிழ்ச்சியில்லாத மக்கள் எல்லா இடத்திலும் மகிழ்ச்சியற்றவர்களாகவே இருப்பார்கள்.

2) தங்களை போன்ற செயலைக்கொண்ட பெயர் பெற்றிராத அநேகரிடத்தில் தொடர்பு வைத்திருப்பார்கள். **திருப்தி** இல்லாத **வெறுப்புணர்வு** கொண்டவர்கள் என்று கூறும் **மற்றவர்களின் சார்பாக** தாங்கள் போராடுவதாக கூறுவார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிடும் மற்றவர்கள் ஒரு போதும் தங்கள் வாயை திறந்திருக்க மாட்டார்கள். இத்தகைய குணம் கொண்டவர்கள் மிக எளிதாகவும், மிக விரைவாகவும் நண்பர்களாகி விடுவார்கள். ஆனால் சிறிது நாட்களுக்குள் நம்மால் அவர்கள் ஏமாற்றப்பட்டதாகவும் வஞ்சிக்கப்பட்ட தாகவும் கூறுவார்கள். நம்மை வஞ்சகமாகப் **புகழ்ந்து** பின்னர் **தாக்கத்** தொடங்குவார்கள். நாம் பதிலளித்த கேள்விகளையே திரும்ப திரும்ப கேட்டு திருப்தி அடையமாட்டார்கள். தாங்கள் வெற்றி அடையும்வரை தாங்கள் சண்டையிட்டதையே திரும்பவும் திரும்பவும் கூறி சண்டையிடுவார்கள். நீங்கள் சொல்வது எதுவும் அவர்களை திருப்திப்படுத்தாது. அடிக்கடி **பொய் சொல்வார்கள்** அல்லது உண்மையைத் **திரித்துக் கூறுவார்கள்** அல்லது தங்களுடைய மாறுபாடான செயல்களைக் குறித்து **நியாயம் பேசுவார்கள்.** அதற்கு காரணமாக தாங்கள் **கர்த்தருடைய வேலையை** செய்வதாக கூறிக்கொள்வார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். ஏனெனில் நம்முடைய கடினமான நேரங்களில் நம் தவறுகளை மிக கவனமாக அவர்கள் **குறிப்பெடுத்து** வைத்துக்கொண்டு அதை **தங்களது ஆயுதங்களாக** பயன்படுத்துவார்கள். வழக்கமாக கையாளும் முறைகளையும், நியமிக்கப்பட்ட ஒழுங்குகளையும் (procedure) பின்பற்றமாட்டார்கள் மகிழ்ச்சியாய் இருப்பதற்காகவே சண்டைபோடுவார்கள், **மகிழ்ச்சியில்லாத மக்களோடு காணப்பட்டு** வருத்தபடுவோர் **ஐக்கியத்தில் இணைந்திருப்பார்கள்.**

பவுல் கூறுவதைக் கவனியுங்கள், இப்படிப்பட்ட பிரச்சனையை ஏற்படுத்துபவர்கள் சபையில் பிரிவினையை உண்டாக்குபவர்கள். தடைகளை ஏற்படுத்தி உண்மைக்கு புறம்பாக

தாங்கள் நம்பவதே சரி என்று வாதிடுவார்கள். புதிய ஏற்பாட்டிலே இது மிகவும் பரிச்சயமான ஒன்றாகும். இத்தகைய மக்களைக்குறித்து 1 கொரி. 5:11, பிலிப்பியர் 3:2, கொலோசயர் 2:8 1 தீமோ. 4:1-6, 2 தீமோ 3:1-9, தீத்து 3:10, யூதா 1:11-6ல் வாசித்து அறியலாம். தெளிவான **எச்சரிகையை** எபேசு சபையின் **உயர் தலைவர்களுக்கு** பவுல் விடுப்பதை அப். 20:29-30ல் வாசிக்கலாம். நான் போன பின்பு **மந்தையைத் தப்பவிடாத** கொடிதான ஓநாய்கள் **உங்களுக்குள்ளே** வரும் என்று கூறி அவர்கள் **மாறுபாடான உபதேசத்தை** போதிப்பர்கள் என்று எச்சரிக்கிறார். இவையெல்லாவற்றிலும் **தவறான உபதேசம்** மற்றும் **தீமையான குண நலன்** இவ்விரண்டும் இணைந்திருப்பதாக அறிகிறோம். பல விதங்களில் பல முறை நமக்கு எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் பிரச்சனை ஏற்படுத்துகிறவர்களை அறிந்து ஆதித்திருச்சபை ஜாக்கிரதையாய் இருக்க அழைக்கப்பட்டதைப் போன்று நாமும் இன்று அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**பிரிந்து வாழ அழைப்பு**

சபையைவிட்டு விலக சொல்லவில்லை, மேலே குறிப்பிட்ட **அவர்களை விட்டு விலக வேண்டுமென்று** உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன் என்கிறார். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் **வயிற்றுக்கே ஊழியஞ்செய்து** நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயருக்கிறார்கள். (ரோமர் 16:17b18)

இங்கு பவுல் சபைக்கு சாபமான மக்களின் நோக்கத்தையும் செயல்திட்டங்களையும் குறித்து கூறுகிறார். முதலாவதாக அவர்கள் முற்றிலும் சுயம் **சார்ந்த மக்கள்** அதாவது **சுயநலவாதிகள்** அவர்களுடைய **தேவன்** அவர்களது **வயிறு** என்று வசனம் கூறுகிறது. இதன் பொருள் என்ன? சிறுபிள்ளைகளைப் போல் என்ன விரும்புகிறார்களோ அதை அப்படியே பெற்றுக்கொள்ள வேண்டும். எப்பொழுதெல்லாம் விரும்புகிறார்களோ அதை அப்பொழுதே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையை உடையவர்கள். அப்படி விரும்புவதை பெற்றுக்கொள்ளாவிட்டால் **சண்டையை தோற்றுவிப்பார்கள்.** அதிலும் வெற்றி பெறாவிட்டால் தங்களது வழியில் பெற **எதையும் செய்ய துணிகரம் கொள்வார்கள்.**

**இரண்டாவதாக** அவர்கள் **வஞ்சிக்கிற** மக்களாய் இருக்கிறார்கள். **நயவசனிப்பு** உண்டு. ஆனால் **தவறான தீமையான நோக்கத்துடன்** பேசுவர்கள். அதைத்தான் இச்சகப் பேச்சு என்று பவுல் குறிப்பிடுகின்றார். அவர்கள் தங்களுடைய வாதத்திற்காக வேதத்தை மேற்கோள் காட்டவும் செய்வார்கள். **தாங்கள் செய்வது தேவப்பணி** என்று உரிமை

கொண்டாடுவார்கள். ஆனால் எல்லாம் தங்களுடைய வழியில்தான் நடைபெற வேண்டும் என்று விரும்புவார்கள். இப்படிப்பட்ட வெள்ளி நாக்கு கொண்ட **பிசாசுகளை** (silver tongue devils) குறித்து **ஜாக்கிறதையாக** இருங்கள்.

**அமெரிக்க, கனடா** நாட்டு திருச்சபைகளில் **ஓரின சேர்க்கை** கொண்ட மக்களின் திருமணத்தை (Gay Marriage- Mark) **ஆதரிக்கும்** வெள்ளி நாக்கு கொண்ட **பிசாசுகள் உண்டு.** இவர்கள் திருச்சபையின் **தலைமை பொறுப்பிலும்** மற்ற முக்கிய பொறுப்பு களிலும் காணப்படுபவார்கள். ஓரின உறவு கொண்டவர்களை போதகர்களாகவும் நியமனம் செய்கின்றனர். இதை இயேசுவின் நாமத்தில்தான் செய்கிறார்கள். 2000 ஆண்டு கால **கிறிஸ்தவ பாரம்பரியத்தையும்** தெளிவாக **போதிக்கப்பட்டிருக்கும்** தேவனுடைய வார்த்தையையும் இவர்கள் **புறம்பாக்கி** விட்டனர். அவர்கள் கூறுவது என்ன ? **வேதாகமம்** இத்தகைய காரியங்களைக் குறித்து **தெளிவாக கூறவில்லை. அன்பு** எல்லா சூழலுக்கும் மேலானது . எனவே வேதாகமத்தின் பகுதிகளை **மறு விளக்கத்திற்கு** re-interupret **உட்படுத்த வேண்டும்** என்று இவர்கள் இன்னும் கூறுகிறார்கள். அல்லது **வேதத்தைத் தள்ளிவைத்து** பரிசுத்த ஆவியானவர் திருச்சபையிலே **ஓரின உறவுக்கு** எங்களை கர்த்தர்தான் **வழி நடத்தினார்** என்று கூறுகிறார்கள். நாங்கள் கர்த்தரின் சிருஷ்டிப்பு என்கிறார்கள். நம்முடைய இந்த செய்தியின் வேத பகுதியில் நாம் இத்தகைய வேத புரட்டுகளை apostasy குறித்து ஆச்சரியம் கொள்ளக்கூடாது. ஆனால் கிறிஸ்துவின் சபையில் நாமும் ஓர் அங்கமாக இருப்பதினால் அதைக் குறித்த அக்கறையின்றியும் காணப்பட்டலாகாது.

ஒரு தலைமுறைக்கு முன் வாழ்ந்த **எட்வர்டு ஜான் சார்னெல்** என்பவர் கூறும்போது **பிழையான** உபதேசத்தில் நாம் சேர்ந்து இருப்பதைவிட **உண்மையான உபதேசத்தில் பிரிந்திருப்பது நலம்** என்று கூறியுள்ளார்.

நம்முடைய **திருச்சபைக்குள்** எலலோரையும் நாம் வரவேற்பது கிடையாது. இது கசப்பான, அனால் **மறுக்கமுடியாத உண்மையாகும்.** ஏனெனில் தேவனுடைய அளவில்லாத அன்பை போதிக்கும் நாம் நம்முடைய விருபங்களுக்கும், செயல்களுக்கும் ஒத்துபோகும் மக்களைத்தான் திருச்சபையை நிரப்ப அனுமதிக்கிறோம். இப்படிப்பட்ட வர்களைத்தான் திருச்சபையின் **நிர்வாகக் குழுக்களில்** இடம் பெற வரும்புகிறோம். நாம் உணமைக்கான உறுதியான நிலையை எடுக்கும் போது நாம் புகழ் பெறுவதில்லை. நம்மை கவனிப்பாரும் இல்லை. ஏற்றுக்கொள்பவரும் இல்லை. இதுதான் இன்றைய திருச்சபையின் உண்மையான நிலையாக உள்ளது.

இந்த உலகமும் பிசாசும் எதிர்த்து நிற்கும் சிறு விஷயங்களைத் தவிர்த்து தேவனுடைய சத்திய வார்த்தைகளின் ஒவ்வொரு பகுதியையும் நாம் உரத்த சத்ததோடும் தெளிவாகவும் எடுத்து உரைத்து தைரியமாக கிறிஸ்துவை உரிமை கொண்டாடினாலும் **நாம் கிறிஸ்துவை உண்மையாய் அறிக்கையிடுவதில்லை.** எங்கே போராட்டம் தொடர்கிறதோ அங்கே **போர்களத்தின்** எல்லா நிலைகளிலும் **உறுதியாய் நின்று** செயல்படும்போதுதான் **உண்மையான விசுவாசம்** loyalty **நிரூபிக்கப்படுகிறது. ஒரு வேளை** நீங்கள் **பின்வாங்கு பவர்களானால்** அது **ஓடி போகுதலும் இகழ்ச்சியான செயலாகவும் இருக்கும்** என்று **மார்டின் லூத்தர்** கூறி உள்ளார்.

3. ஞானத்திற்கு அழைப்பு

உங்கள் **கீழ்படிதல்** யாவருக்கும் தெரியவந்திருக்கிறது. ஆகையால் **உங்களைக் குறித்து சந்தோஷப்படுகிறேன்.** ஆனாலும் நீங்கள் **நன்மைக்கு ஞானிகளும் தீமைக்கு பேதைகளுமாயிருக்க வேண்டுமென்று** விரும்புகிறேன். வ.19

நன்மைக்கு **ஞானிகள்**

தீமைக்கு பேதைகள்

**நன்மைக்கு ஞானிகள்** என்பதை ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பில் **நன்மை செய்வதில் வல்லுநர்களாக** (expert) இருங்கள் என்று கூறப்பட்டுள்ளது. **தீமைக்கு பேதைகள்** என்றால் பழுது அற்றவர்களாகவும் தீமையான காரியங்களுக்கு **ஒன்று சேராதவர்களாகவும்** இருங்கள் என்று பொருள் ஆகும். **ஜே.பி.பிலிப்ஸ்** இதை கூறும் போது **தீமையின் துவக்கநிலையில்கூட** நீங்கள் இல்லாதவர் களாயிருங்கள் (not even beginers in evil) என்று கூறுகிறார். **தீமையினாலே** கறைபடாதவர் களாக நாம் காணப்படவேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் **இழிவான ஆபாச படங்கள்** மற்றும புத்தகங்களைக் (pornography) குறித்த விவரத்தை பேட்டிக் கண்டு வானொலியில் ஒலிபரப்ப **வாழ்வுக்கு வார்த்தை** என்ற ஸ்தாபனத்தின் வாலிபர்களுக்கான ஊழியத்தின் தலைவர் **ஜாக் ரிர்ட்சன்** என்பவர் அழைக்கப்பட்டிருந்தார். **பேட்டி** நடைபெறுவதற்கு முன்னே **அவரைப் பேட்டி காண்பவர்** அவருக்கு **திரளான ஆபாச படங்களையும்** புத்கங்களையும் அனுப்பி **பேட்டிக்கு ஆயத்தமாக வரும்படி** அழைத்திருந்தார். அதை பெற்றுக்கொண்ட ஜாக் தன் செயலரை அழைத்து **இந்த குப்பையை** இங்கிருந்து **அகற்றிவிடும்படி கூறிவிட்டார்.** பேட்டியின்போது அவரைப் பேட்டி கண்டவர் அவரிடம் தான் அனுப்பியவற்றை **ஜாக் பார்த்தாரா? வாசித்தாரா?** என்று கேட்டார், அதற்கு **ஜாக்** இல்லை என்று பதிலளித்தார். ஏன் என்று கேட்டபோது ஜாக் கூறினார் அந்த **சாக்கடை நாறுகிறது** என்பதை

அறிந்துகொள்ள **சாக்கடையின் மூடியை திறந்து** அதனுள் மூக்கை நுழைத்து முகர்ந்து பார்க்க வேண்டியதில்லை. என்று பதிலளித்தார்.

இந்த வேத வசனங்களில் 17-19 மூன்று உண்மைகளை வாசிக்கிறோம்.

1. எந்த உபதேசமும் வேதாகமத்திற்கு **ஒத்ததா** அல்லது **வேதத்திற்கு முரனானதா?** வ.17

2. **உபதேசம்** இயேசுகிறஸ்துவை **மகிமைப்படுத்துகிறதா?** அல்லது **யாரை மகிமைப் படுத்துகிறது?** வ. 18 என்று அறிய வேண்டும்

3. **உபதேசம்** ஒழுக்கநெறிகளை கொண்டதா. அல்லது **சீர்குலைக்கிறதா**? வ. 19

4) வெற்றியின் அழைப்பு

**சமாதானத்தின்** தேவன் சீக்கிரமாய் **சாத்தானை உங்கள் கால்களின் கீழ் நசுக்கிப் போடுவார்.** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களுடனே கூட இருப்பதாக ஆமென் வ. 20 என்று பவுல் முடிக்கிறார்.

ஏன் பவுல் **சாத்தானை இங்கு கொண்டு வருகிறார் ?** ஏனெனலில் **அவனிடமிருந்து தான் கள்ளப்போதவர்களும் நயவஞ்சக மக்களும்** புறப்பட்டு வருகிறார்கள். அவர்கள் அதை உணருகிறார்களோ, இல்லையோ **சாத்தானின் பணியை** செய்கிறவர்களாய் இருக்கிறார்கள். இங்கு **சமாதானத்தின் தேவன் சாத்தானை நசுக்கி போடுவார்** என்பதின் மூலம் அவர் **சமாதானத்தின்** தேவன் மட்டுமல்ல, **சேனைகளின்** தேவன் என்றும் அறிகிறோம். **சாத்தானுக்கு** எதிராக **போராடி** அவனை **இப்பூவுலகில் அழித்துபோடும்** ஆண்டவராகவும் இருக்கிறார். **ஏதேன்** தோட்த்தில் **சர்ப்பத்திற்கு எதிராக** கூறப்பட்டவைகள் தான் (ஆதி 3:15) மறைமுகமான, ஆனால் **தெளிவான குறியீட்டாக இந்த வசனம்** உள்ளது.

**இது இன்னும் நடைபெறவில்லை.** சாத்தான் சிலுவையின் மூலம் **தோற்கடிக்கப்பட்டான்** அவனது **நித்திய முடிவு** அறிவிக்கப்பட்டுள்ளது. அனால் **அழிக்கப்படவில்லை.** அது நடைபெறும்போது அகில உலகமும் ஆண்டவரின் **வெற்றியையும்** சாத்தானின் **தோல்வியையும்** அறிந்துகொள்ளும். சாத்தானை பின்பற்றி அவனது தீமையான செயலை செய்து அவனது **கைக்கூலியாய் விளங்குபவர்கள்** இறுதியில் நித்திய அழிவுக்கு பாத்திரமானவனைப் **பின்பற்றியதை அறிந்து துக்கப்படுவார்கள்.**

தோற்றுப்போன, சோர்ந்துபோன, இதயம், இழந்த தேவ பிள்ளைகளுக்கு இது மிகுந்த **உற்சாகமளிக்கும் நல்ல செய்தியாகும்.** நாம் இப்பொழுதும் எப்போழுதும் உறுதியாய் நின்று தேவனுடைய **சர்வாயுத வர்க்கத்தை** எடுத்துக்கொண்டு போராடுவோம். வரலாற்றின்

இடைப்பட்ட நாட்களில் வாழ்ந்து வரும் நமக்கு இந்த உலகில் இருக்கும் வரை **போராட்டத்திலிருந்து விடுதலை கிடையாது.** இதற்கு எந்த கிறிஸ்வனும் பரிசுத்தவானும் **தப்பித்துக்கொள்ளவோ** அல்லது **விலகி வாழவோ** முடியாது. ஆனால் நமக்கு ஆறுதலான செய்தி என்னவெனில் **நாம் வெற்றியின் பக்கம் இருக்கிறோம்** என்பதே. **வெற்றி நிச்சயிக்கப்பட்டுள்ளது.**

இந்த நாளில் **சாத்தானின்** கை ஓங்கி உயர்ந்து காணப்படலாம். ஆனால் **இயேசுகிறிஸ்து இத்தகைய நாளை மேற்கொள்வார்.** அப்பொழுது **சாத்தான் நம் கால்களின் கீழே நசுக்கப்படுவதுடன் தீமையும் அழிக்கப்படும்** பூமியின் மீது **இயேசு கிறிஸ்து ஆளுகை** செய்வார். நாமும் அவரோடு அரசாளுவோம். எப்பொழுது ?

வ.20 கூறுகிறது சீக்கிரமாய் (soon) 2000 ஆண்டுகளுக்கு முன்னால் சீக்கிரம் என்றால் இப்பொழுது அது இன்னும் **சமீபமாய் உள்ளது** என்று அர்த்தமாகும்.

பிரியமானவர்களே! நாம் வெற்றியின் பக்கம் இருக்கிறோம் திருச்சபை பல்வேறு கொள்கையினாலும் பிழையான உபதேசங்களினாலும் சீர்குழைந்து காணப்படாலும் முடிவு இன்னும் ஏற்படவில்லை. **ஆட்டத்தின்** (விளையாட்டு) **மத்தியில்** இருக்கிறோம். ஆட்டத்தின் **இறுதி வரும்** மட்டும் காத்திருக்கவேண்டும்.

**ஜான் பைப்பர்** என்ற பிரசங்கியார் கூறும்போது. திருச்சபையில் **உண்மையா? ஒற்றுமையா?** என்று கேள்வி எழும்போது, சிலர் **ஒற்றுமைக்காக** உண்மையை விலைபேசி விடுவார்கள். வேறு சிலர் **உண்மைக்காக** ஒற்றுமையை சீர்குழைத்து விடுவார்கள் என்று கூறி உள்ளனர். நமக்கு **இரண்டுமே தேவை** சத்தித்தின் மீது அதாவது உண்மையின் மீது கட்டப்ப்ட்ட **திருச்சபையே ஒன்றுபட்டு** காணப்படும். தனிப்பட்ட மக்களின் விருப்பு, வெறுப்பு அற்புத **அடையாளங்கள்** இவைகளின் மீது **கட்டப்படும் திருச்சபை** காலப்போக்கில் உடைந்தும் உலர்ந்தும்விடும்.

**உண்மை, ஒற்றுமை** - இவ்விரண்டும் **ஒரு திருச்சபைக்கு தேவை.** இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்லக்கூடியது. நாம் இதை பிரிக்க முயற்சித்தால் அழிவை சந்திப்போம். இரண்டையும் ஒன்றாக வைத்திருப்போமானால் நாம் பரிசுத்த முத்தத்தோடு **ஒருவரையொருவர் வாழ்த்துகிற மக்களாயிருப்போம்.**

சபைக்கு பிரச்சனைகளையும் பிரிவினைகளையும் ஏற்படுத்துகிற சாபமான மக்களாக **நாம் காணப்படாமல்** சத்தியத்தின் மேல் நம் வாழ்வை கட்டுவோம், ஒன்றுபட்டு உறுதியாய் நிற்போம், சாத்தான் நம் கால்களின் கீழே **நசுக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை. சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.** ஆமென்.



# உலகம்

கலாநிதி தியோடர் வில்லியம்ஸ்

**உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறாதிருக்கும் ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை.** என்று யோவான் எழுதியிருக்கிறார். (1 யோ. 2:15) **தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கேட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தன்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.** என்று யோவான் 3:16ல் நாம் வாசிக்கிறோம். இதற்கு **தேவன் உலகத்தில் அன்பு கூர்ந்தார்** என்று பார்க்கிறோம். ஆனால் 1 யோவான் 2:15ல் **உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும்** அன்பு கூறாதிருங்கள் என்று கூறப்படுகிறது. இவ்விரு வசனங்களும் முரன்படுவதைப்போல் தோன்றினாலும் இதில் முரன்பாடு எதுவும் கிடையாது. ஏனென்றால் உலகம் என்கிற சொல் திருமறையிலே பல விதமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

### 1) தேவன் படைத்த உலகம்

உலகம் என்பதற்கு **தேவன் படைத்த உலகம்** என்று பொருள் உண்டு. தேவன் தாம் உண்டாக்கிய எல்லாவற்றையும் பார்த்து அது நல்லது என்று கூறினார். 1 கொரி 3:21-23ல் பவுல் **நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள், கிறிஸ்து தேவனுடையவர், ஆகையால் உலகம் உங்களுக்குரியது** என்று எழுதுகிறார். இது தேவன் உண்டாக்கிய உலகம் என்று குறிக்கப்படுகிறது. இந்த உலகத்திலே உண்டாக்கப்பட்ட காரியங்களெல்லாம் தேவனின் மக்களுக்காகவும் அவர்களின் நல்வாழ்க்கைக்காகவும் அவர்கள் அனுபவிப்பதற்காகவும் உண்டாக்கப்பட்டன. இந்த உலகம் நல்லது என தேவன் கூறியிருக்கிறார். அன்றைக்கு அவர் உண்டாக்கிய நாளிலே அது நல்லது என்று கூறனாரே, அந்த கூற்றை அவர் மாற்றவே இல்லை. அன்றிலிருந்து இன்றுவரை அவர் உருவாக்கிய உலகம் நல்லாய்த்தான் இருக்கிறது. ஆகையினாலே உலகத்தைவிட்டு ஒருவன் தப்பி ஓடுவதின்மூலம் தேவனை நெருங்கி சேறுகிறான் என்று ஒருகாலும் திருமறை கூறவில்லை. தேவன் படைத்த உலகம் நல்லது. அது நமக்குரியது நாம் அதை ஆட்கொள்ளவேண்டும் அனுபவிக்க வேண்டும் என்று திருமறை போதிக்கிறது.

### 2, மக்கள் நிறைந்த உலகம்

இரண்டாவதாக உலகம் என்ற சொல் மக்கள் நிறைந்த உலகம் என்று பொருள்படுகிறது. இந்த உலகத்திலே ஆண்களும் பெண்களும் பல இனத்தாரும் நிறத்தாரும், நாட்டாருமாக மக்கள்

உண்டாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மக்கள் நிறைந்த உலகத்தை நாம் நெசிக்கவேண்டும். இதை மீட்பதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். யோ. 3:16ல் குறிக்கப்படும் தேவன் **அன்பு கூர்ந்த உலகம்** இந்த மக்கள் நிறைந்த உலகத்தை குறிக்கிறது.

**3. வாழ்க்கை முறையான உலகம்**

மூன்றாவதாக உலகம் என்கிற சொல் 1 யோ. 2:15-17ல் தேவனுக்கு விரோதமான வாழ்க்கை முறையை காட்டுகிறது. தேவனுக்கு விரோதமாக கலகம் பண்ணும் மனித சமுதாயத்தினர் வாழ்க்கை முறை இது. இது தேவனுக்கு விரோதமானது. இந்த உலகத்திலே எல்லாவற்றையும் அனுபவிப்பதற்காக தேவன் உண்டாக்கினார். ஆகையால் நாம் எல்லாவற்றையம் தடையில்லாமல் அனுபவிக்கலாமா? தேவன் உண்டாக்கின உலகத்திலே பாவம் நுழைந்துவிட்டது. மனிதன் இசையை ரசிக்கலாம். இசை அவனுக்காகவே உண்டாக்கப்பட்டது. ஆனால் இசைக்குள்ளும் பாவம் நுழைந்துவிட்டபடியினாலே எல்லா இசையையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. கீழான உணர்ச்சிகளை தூண்டக்கூடிய இசையும் உண்டு. அதிலே ஒரு விசுவாசி பங்குகொள்ள முடியாது. இப்படியாக **உலகத்தின் உள்ளேயே ஒரு உலகம் உண்டாகிவிட்டது**. தேவன் உண்டாக்கின உலகத்திற்குள்ளேயே மனிதன் முரட்டடத்தினால் தனக்கென்று இன்னொரு உலகத்தை உண்டு பண்ணிக்கொண்டன். இந்த இரண்டாவது உலகத்தைத்தான் நாம் தவிர்க்க வேண்டுமென யோவான் எழுதுகிறார்.

**உலகத்தில் அன்பு கூறாதிருங்கள்** என்று கூறும்போது **விழுந்துபோன மனிதன்** தன்னுடைய முரட்டாத்தினாலே தேவனுக்கு இடங்கொடுக்காதபடி **தனக்கென்று ஒரு வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டான். அந்த வாழ்க்கை முறையைத்தான் நேசிக்கக்கூடாது என்று யோவான் கூறுகிறார்.**

**உலகத்தில் அன்பு கூர்ந்தால்** நம்மிடம் பிதாவின் அன்பு இல்லை. **உலகத்தில் அன்புகூறாதிருங்கள்** என்பதோடு அவர் நிறுத்திக்கொள்ளவில்லை. **தேவனிடத்தில் அன்பு கூற வேண்டும்.** அவருக்கு முதலிடம் கொடுத்து முழுமனதோடு **அவரை நேசிக்க வேண்டும்** அப்படி நேசிப்பதற்கு **உலக அன்பு தடையாய்** இருக்கிறது. ஆகையினாலே தான் **உலகத்தில் அன்பு கூறாதிருங்கள்** என்று கூறுகிறார்.

**உலகத்தையும் ஆண்டவரையும்** நாம் **ஒன்றாய் நேசிக்க** முடியாது. இருமனம் உள்ள மக்கள் எப்பொழுதுமே சிக்கலான நிலையில் அகப்பட்டுக்கொள்வார்கள். தேவ சித்தத்தை நாம் செய்ய வேண்டுமானால் **உலகத்தை நேசிக்க முடியாது.** இன்றைக்கு அநேக வாலிபர்கள் தேவ சித்தம் என்று அறிவதற்கு காத்திருக்கிறார்கள். ஆனால் உலக ஆசைகள் தங்கள் இருதயத்தில் பேணி வைத்து தேவனுடைய சித்தத்தை அறிய முற்படும்போது அவர்களால் அதை தெளிவாக தெரிந்துகொள்ள முடியாது. **ஆகையினாலேதான் உலகத்தில் அன்பு கூறாதிருங்கள்** என்று யோவான் எழுதுகிறார்.

**வாழ்க்கை முறையின் இச்சைகளும் பெருமைகளும்**

1 யோவான் 2:16ல் குறிப்பிடப்பட்டுள்ள உலகமானது **தேவன் படைத்த உலகம் அல்ல**

மக்கள் நிறைந்த உலகமும் அல்ல. அது மனிதன் **தேவனை ஒதுக்கி வைத்து** தனக்காகவே அமைத்துக்கொண்ட ஒரு வாழ்க்கை முறையென்றும் அவ்விதமான வாழ்க்கை முறையைக்கொண்டு சமுதாயம்தான் உலகம் என்று கவனித்தோம், உலகம் என்று இன்னும் தெளிவாய் 1 யோவன் 2:16ல் யோவான் விளக்கிக்காட்டுகிறார். அந்த வசனத்தை சற்று ஆழமாக கவனிப்போம்.

**ஏனெனில் மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளையெல்லாம் பிதாவினால் உண்டானவை களல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்** (1 யோ. 2:16) இவ்வசனத்தில் **உலகம் என்பது** மனிதன் தனக்காக **சுயநலமாக அமைத்துக்கொண்ட ஒரு வாழ்க்கை முறையை குறிக்கிறது.** அந்த வாழ்விலே **மூனறு அம்சங்கள்** உண்டு, **மாம்ச இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின்** பெருமை இவை மனிதனை கீழ்படிதலின் பாதையிலிருந்து இழுத்துக்கொண்டு போகிறவை.

அதியாகமம் 3:16ல் சாத்தான் சர்பத்தின் உருவத்தில் வந்து ஏவாளை சோதித்த சம்பவத்தை வாசிக்கிதோம். தேவன் நன்மை தீமை அறியக்கூடிய மரத்தின் கனியை அவர்கள் புசிக்கக்கூடாது மற்ற எந்த மரத்தின் கனியையும் புசிக்கலாம் என்று கூறியிருந்தார். **மனிதனுக்கு தெரிந்துகொள்ள ஒருவாய்ப்பை கொடுக்கவும்,** அவன் தெரிந்துகொள்வதின் மூலமாய் **கீழ்படிதலை கற்றுக்கொள்ளவும் தேவன் ஒழுங்கு செய்திருந்தார்.** ஏவாள் அந்த கனியை புசிப்பதற்கு நல்லது என்று பார்த்தாள். அது அவள் பார்வைக்கு இன்பமாய் இருந்தது. அது புத்தியை தெளிவிப்பதற்கு இச்சிக்கதக்கது என்று கண்டாள். இந்த மூன்று செயல்களிலும் **மாம்ச இச்சை, கண்களின்** இச்சை **ஜீவனத்தின்** பெருமை என்னவென்று நமக்கு தெளிவாகிறது. பார்வைக்கு இன்பம் என்பது கண்களின் **இச்சையை** குறிக்கிறது. **புத்தியை தெளிவிப்பதற்கு** இச்சிக்கபடதக்கது என்பது ஜீவனத்தின் பெருமையை குறிக்கிறது.

மத்தேயு 4:11ல் நமது ஆண்டவரின் சோதனைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சாத்தான் இயேசுவை வனாந்திரத்தில் சோதித்தான் முதலாவது சோதனையில் **கற்களை** அப்பமாக்கி அவருடைய பசியை ஆற்றிக்கொள்ளும்படி கூறினான். அது மாம்ச இச்சைகளின் சோதனை ஆகும். அவர் **தேவாலத்தின் மேலிருந்து** தாழ குதித்தால் மக்கள் அந்த செயலை கண்டு அவரை தேவ குமாரனாக ஏற்றுக்கொள்வார்கள் என்று கூறினான். **அது கண்களின் இச்சைக்குரிய** சோதனையாகும். கடைசியாக இயேசுவை **ஒரு உயர்ந்த மலையில்கொண்டுபோய்** நிறுத்தி உலகத்தின் சகல ராஜ்ஜியங்களையும் அவருக்கு காண்பித்து அவனை அவர் தாழ விழுந்து பணிந்துகொண்டால் அந்த ராஜ்ஜியமும் அதன் மகிமையும் அவருக்கு உரியதாகும் என்று கூறினான். **அது ஜீவனத்தின் பெருமையாகும். மாம்ச இச்சை, கண்களின் இச்சை ஜீவனத்தின் பெருமை** என்ற வழிகளிலே சாத்தான் இயேசுவையும் சோதித்தான்.

**அ. மாம்ச இச்சை**

மாம்சம் என்று கூறும்போது உடலை மட்டும் குறிப்பதில்லை, அது **மனிதனுடைய பாவ**

**சுபாவத்யையும்** குறிப்பதாகும். உடல் இயற்கையாவே **பாவம் உள்ளது** அல்ல. உடலின் மூலமாகத்தானே எல்லாசோதனைகளும் வருகின்றன. ஆகையால் இந்த உடலை துன்புறுத்தி கொன்று போடலமென்று சிலர் யோசிப்பர். ஆனால் இது திருமறைக்கு ஏற்ற சிந்தனை அல்ல. நம்முன்டைய **உடல் பாவத்துக்குரியது** அல்ல. அது **தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டது. அவர் வாழும்படியாகவும்** அவர் மகிமைபடும்படியாகவும் **அவருக்காக நாம் உபயோகிக்கக் கூடியது.** நம் உடல் **இந்த உடலை** பாவத்திற்கென்று விற்றுபோடலாம் அல்லது தேவனுக்கென்று ஒப்புகொடுக்கலாம். இரண்டுமே **நம் கையில்தான்** இருக்கிறது. மனிதன் தன்னுடைய சித்தத்தில் பாவம் உள்ளவனாய் இருக்கிறான்.

பாவத்தை தெரிந்துக்கொள்ளகூடிய மனநிலை அவனுக்குள்ளேயே இருக்கிறது. இந்த பாவ தன்மையினால் அவன் தன் சரீரத்தை தவறான ஆசைகளுக்கு விற்றுப்போடுகிறான். உடலின் ஆசைகள் எல்லாம் பாவமானவை என்று நாம் கூறிவிடமுடியாது. உடலின் ஆசைகள் இயற்கையாகவே மனிதனுக்கு கொடுக்கபட்டவை, அவற்றை நாம் ஒதுக்கிட முடியாது. அவற்றை சரியான வழியிலே திருப்திப்படுத்த தேவன் நமக்கு ஒழுங்கு பண்ணியிருக்கிறார். உடலின் ஆசைகளையும் தேவைகளையும் தவறானவழியிலே பயன்படுத்தி **கீழ்தரமான ஆசைகளுக்கு இடங்கொடுக்கும்போது** அது மாம்ச இச்சையாகிறது. மனிதனுக்குள்ளே உள்ள பாவ சுபாவம் அவனுடைய உடலை தவறான இச்சைகளுக்கென்று வழிநடத்துகிறது.

நம் விசுவாச வாழ்க்கையில் மாம்ச இச்சை எவ்வளவு தூரம் இடையூராக இருக்கிறது. உலகத்தின் அன்புக்கு அது நம்மை வழி நடத்துகிறது. நாம் தேவனுடைய சித்தத்தை அறியாதபடிக்கும் அவர் மேல் அன்புகொள்ளாதபடிக்கும நம் அன்பை அவிழ்த்திபோடுவது மாம்ச இச்சையாகும். எவ்வளவோ ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் தேவனுடைய வழியை தெரிந்துகொண்டு அவர் ஊழியம் செய்கிறவர்கள் மாம்ச இச்சையினால் ஆவியிலே குருடாகி அவருடைய வழியை காணக்கூடாத நிலைக்கு வந்துவிடுகிறார்கள். உடலின் ஆசைகளை நாம் சரியான வழியில் பயன்படுத்த வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் ஆளுமைக்கு அவற்றை ஒப்புக்கொடுக்கவேண்டும். நம் பாவ சுபாவம் நம்முடைய உடலின் ஆசைகளின் ஆளும்படி இடம் கொடுக்ககூடாது.

**ஆ. கண்களின் இச்சை**

இரண்டாவது கண்களின் இச்சை என்று யோவான் குறிப்பிடுகிறார். மாம்ச இச்சைக்கும் கண்களின் இச்சைக்கும் வேறுபாடு உண்டு. கண்களின் பார்வைக்கு பகட்டாய் எது காணப்படுகிறதோ அதை தெரிந்துகொள்வது அது உண்மையாகவே நன்மையானதா தீமையானதா என்று யோசித்துப் பார்ப்பதில்லை. பார்வைக்கு விருப்பமுள்ளதாய் இருந்தால் போதும், உடனே அதை தெரிந்துக்கொள்கிறோம். அதுதான் கண்களின் இச்சை. கடைத்தெரு வழியாய் நடந்துசெல்லும்போது பகட்டாய் காணப்படுவதையெல்லாம் வேண்டுமென்று அதிலே கொண்டுபோய் பணத்தை கொட்டுவோமானால் அதுதான் சிறுபிள்ளைதனம். சிறு குழந்தைகள்

தான் கண்ணுக்குபட்டதெல்லாம் வேண்டுமென்பார்கள். சிறு குழந்தைகள் நிழலை பார்த்து அதை கொண்டுவந்து கொடு என்று அழுவது விசித்திரமாக காணப்படுகிறதோ. அவ்விதமாகத்தான் கண்ணுக்கு காணப்படுவதெல்லாம் எனக்குவேண்டும், அதற்காக என்ன கிரயம் வேண்டு மென்றாலும் கொடுத்துவிடுகிறேன் என்று கூறுவது சிறுபிள்ளை தனமாகும். அதைத்தான் யோவன் கண்களின் இச்சை என்கிறார்.

நமது தீர்மானங்கள் தேர்ந்தெடுப்புகள் தேவ சித்தத்தை அடிப்படையாக கொண்டவையாக இருக்கவேண்டும். கண்ணுக்கு விருப்பமானதை மட்டும் நாம் தெரிந்துகொள்ளக்கூடாது. கண்னால் காண்பதை அது நன்மையானதா? தீமையானதா? தேவ சித்தத்திற்குரியதா? அல்லது அதற்கப்பாற்பட்டதா என்று யோசித்து பார்த்து தெரிந்துகொள்ள வேண்டும.

## இ. ஜீவனத்தின் பெருமை

எபேசியர் 2:1-3ல் இயேசு கிறிஸ்துவை ஒரு மனிதன் ஏற்றுக்கொள்வதற்கு முன்பு பாவத்திலே மரித்தவனாய் அவன் இருக்கும் நிலையில் அவனுடைய வாழ்க்கையை ஆட்கொண்டு நடத்தும் மூன்று காரியங்கள் குறிப்பிடப்படுகின்றன.

**முதலாவது மாம்சம்** குறிப்பிடப்படுகிறது. மாம்ச இச்சைகளின்படி அவன் இழுத்துச்செல்லப்படுகிறான். **இரண்டாவது உலகம்** குறிப்பிடப்படுகிறது. உலகத்தின் பழக்கங்கள் வழக்கங்கள், கேட்பாடுகள் அவன் வாழ்க்கையை நடத்துகின்றன. **மூன்றாவது சாத்தான்** குறிப்பிடப்படுகிறான். சாத்தானும் அவனை ஆட்டி வைக்கிறான். ஆனால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளான பிறகு இந்த மூன்றின் ஆதிக்கத்திலிருந்து நாம் விடுதலை பெறுகிறோம்.

உலகம் என்று கூறும்பொழுது அதிலே **மூன்று அம்சங்கள்** அடங்கியிருக்கின்றன என்று பார்த்தோம், மூன்றாவது அம்சமான **ஜீவனத்தின் பெருமையை** கவணிப்போம்.

**ஜீவன்** என்ற சொல் இருவிதமான பொருளில் புதிய ஏற்பாட்டில் எழுதப்படுகிறது. ஜீவன் என்ற சொல் இரு **கிரேக்க சொற்களிலிருந்து** மொழியெர்க்கப்பட்டிருக்கிறது.

ஒன்று தேவனுக்குரிய ஜீவன் - **நித்திய ஜீவன்** ஆகும். அது தேவ ராஜ்ஜியத்திற்குரிய **ஜீவன்** என்று பொருள்படும்.

இன்னொன்று **மிருக வாழ்க்கைகுரிய ஜீவன்,** தேவனற்ற ஒரு மனிதன் மிருகத்தைபோல நடத்தக்கூடிய வாழ்க்கை என் பொருள்படும்.

இந்த இரண்டாவது பொருள் தான் 1 யோவான் 2:16ல் உள்ள **ஜீனத்தின்** என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஜீவனத்தின் பெருமை என்பது கேவளமான ஒன்றாகும். மிருகத்தை போல் மனிதன் வாழும்போது அந்த தாழ்வான வாழ்க்கைமகுரிய பெருமையாகும். அந்த பெருமையை நாம் நாடும்போது உலகத்திற்கு அடிமைப்பட்டவர்களாவோம் என்று யோவான் எழுதுகிறார்.

மற்றவர்கள் நம்மை புகழவேண்டும் மற்றவர்களின் பார்வைக்கு நாம் பெரியவர்களாக காணப்படவேண்டும், உலகம் எதையெல்லாம் பெரிதாக பாராட்டுகிறதோ அதை நாமும் பெரிதாக

பாராட்ட வேண்டும் என்று ஒரு மனிதன் வாழும்போது அது ஜீவனத்தின் பெருமை ஆகும். படித்து பட்டம் பெற்றவர்களெல்லாம் உலகத்தால் பாராட்டப்படுகிறார்கள். ஆகையினாலே தேவனின் சித்தம் பிரதானமானதல்ல, படிப்பும் பட்டம்தான் பெரியது என்று ஒருவன் கூறும்போது அவன் ஜீவனத்தின் பெருமைக்கு இடம் கொடுக்கிறான். பெரிய வீடும் மாட மாளிகையும் கொண்டால்தான் மற்றவர்களைப் போல் நாமும் வாழலாம். அவர்களுக்கு இருக்கிறது எனக்கும் வேண்டும் என்ற மனப்பான்மையோடு ஒருவன் தேவனின் சித்தத்தை ஒதுக்கி வைத்து மாட மாளிகையையும், சொத்துக்களையும் தேடும்போது அது ஜீவனத்தின் பெருமையாகிறது. படிப்பு தவறல்ல சொத்தும் உடைமையும் உள்ளவர்களாய் இருப்பது தவறல்ல, மாட மாளிகைகளை தேவன் நமக்கு அளிப்பாரானால் அவற்றை பெற்றுக்கொள்வது தவறல்ல. ஆனால் தேவனின் சித்தத்தை ஒதுக்கி வைத்து வாழ்கையில் அவற்றிக்கு பிரதானமான இடம் கொடுப்போமானால் அது தவறானதாகும்., அது ஜீவனத்தின் பெருமையாகும்.

அனேக முறை நம்முடைய விசுவாச வாழ்க்கையிலே இவ்விதமான சோதனை ஏற்படுகிறது. தவறான வழியில் வாழ்கறவர்களெல்லாம் பெயரும் புகழும் பெறுகிறார்கள். வசதி படைத்த வாழ்வை சம்பாதித்துக்கொள்கிறார்கள். கர்த்தருக்கென்று வாழும் நம்கோ எந்த விதமான வசதிகளும் இல்லை. சொத்து சுதந்திரமும் இல்லை என்று நாம் சோர்ந்து போவதுண்டு. மற்றவர்கள் போல் வாழ வேண்டும். மற்றவர்களுக்கு பெருமை கொடுக்கக்கூடியது எனக்கும் வேண்டும். தேவ சித்தம் பிரமானமானதல்ல என்று நாம் எண்ணும் போது ஜீவனத்தின் பெருமைக்கு இடம் கொடுக்கிறோம்.

இன்றைக்கு உலகத்திலே பணம் இருந்தால் பாதுகாப்பு உண்டு என்று அநேகர் நினைக்கிறார்கள். மனித பலம் இருக்குமானால் பாதுகாப்பு உண்டு என்று சிலர் நினைக்கிறார்கள் ஆனால் இவையெல்லாவற்றையும்விட நமக்கு பாதுகாப்பாக அமைக்கூடியது தேவனின் திருசித்தம்தான்.

**தேவ சித்தம் என்கிற வட்டத்தின் நடு மையத்தின் நான் இருக்கிறேன், அதைவிட வேறு எந்த பாதுகாப்பும் எனக்கு அவசியமில்லை** என்று ஒரு பக்தர் கூறினார். தேவனுடைய சித்தத்தின் மையத்திலே நாம் இருக்கிறோமே? அவரை பிரியப்படுத்தவேண்டும் என்கிற வாஞ்ஜை பிரதானமாக நம் வாழ்க்கையை ஆட்டிக்கொண்டிருக்கிறதா? அப்படியானால் அதுதான் நமக்கு பாதுகாப்பாய் அமையும்.

## உலகமும் இச்சைகளும் ஒழிந்துபோம்

**உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் : தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்** என்று யோவான் எழுதுகிறார் (1யோவான் 2:17)

டேவிட் லிவிங்ஸ்டன் என்ற பெயர்பெற்ற மிஷனரி வீரர் மரணம்டைந்த வேளையில் அவரது அடக்க ஆராதனையில் கந்தல் அணிந்து பரட்டைதலையோடு ஒருவன் தேம்பி தேம்பி அழுதுகொண்டு நின்றி கொண்டிருந்தான். இங்கிலாந்திலுள்ள வெஸ்ட் மினிஸ்டர் ஆபே என்ற புகழ்பெற்ற ஆலயத்தில் அந்த அடக்க ஆராதனை நடந்தது. **லிவிங்ஸ்டனின் சாவு உமக்கு**

இவ்வளவு துக்கத்தை உண்டு பண்ணியிருக்கிறதே . நீ அவருக்கு நெருங்கிய உறவினரா? என்று ஒருவர் அவனை கேட்டார்.

அதற்கு அந்த மனிதர் லிவிங்ஸ்டனும் நானும் ஒன்றாக வளர்ந்தோம். ஒரே தொழிற்சாலையில் வேளை செய்தோம். லிவிங்ஸ்டன் சுறுப்சுறுப்போடும் ஆர்வத்தோடும் எல்லா சமயத்தையும் பயன்படுத்தி தன் பக்கத்திலே ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு எப்பொழுதும் படித்துக்கொண்டிருப்பார்.

நான் அவரை பார்த்து பட்டம் பெற்று என்ன செய்யப்போகிறாய்? என்று கேட்பேன் அப்பொழுது அவர் **நான் படித்து பட்டம்பெற்று இயேசு கிறிஸ்வுக்கென்று ஒரு மறுத்துவ மிஷனரி ஆவேன்** என்று கூறுவார். அவரை பார்த்து நகைத்து பயித்தியக்காரன் பிழைக்க தெரியாதவன் என்றெல்லாம் கூறியிருக்கிறேன். எங்களுடைய வாழ்கையின் வழிகள் பிரிந்தது. அவர் ஒருபக்கம் சென்றார். நான் இன்னொரு பக்கம் சென்றேன். வாழ்க்கையில் எனக்கென்று மேலான காரியங்களை தெரிந்துகொண்டேன் ஜீவனத்தின் பெருமை என்னை ஆட்கொண்டது.

அனால் இறுதியில் என் வாழ்க்கையிலே திருப்தி காணாதபடி குடிப்பழகத்திற்கு இடம்கொடுத்தேன். என் வேலை பரிபோய்விட்டது, என் மனைவியம் பிள்ளைகளும் என்னை விட்டு போய்விட்டர்கள். தெருவில் அலைந்து திரிகிற ஒரு குடிகாரனாய் நான் மாறிவிட்டேன் ஒரு குடிகாரனின் கல்லறைதான் எனக்கு காத்திருக்கிறது.

தேவனை கணம் பன்னிய இந்த லிவிங்ஸ்டனை இனறைக்கு உலகம் கனம் பண்ணுகிறது தேவன் கனம் பண்ன்கிறார். நானோ வாழ்க்கையை இழந்து விட்டேனே என்று அதற்காக தான் துக்கப்படுகிறேன். என்றான்.

ஆம் உலகமும் அதின் இச்சையும் ஒளிந்த போகும்.

**மிருகங்கள்** மண்ணால் உண்டாக்கப்பட்ட மற்ற ஜீவராசிகள் தேவனோடு தொடர்புகொள்ள தேவையில்லை. எனவே அவைகளுக்கு ஆவி தேவையில்லை, கொடுக்கபடவும் இல்லை,. ஜோடி ஜோடியாய் படைககப்பட்ட இவைகளுக்கு இனப்பெருக்க உடல் உறவு உணர்ச்சிகள் உள்ளன். அறிவும் உள்ளன. நாய் கல்லை திண்ணாது, மான் மாமிசம் புசிக்காது. நாய் வேட்டையாட, வீட்டை காக்க குற்றவாலியை கண்டுபிடிக்க அறிவு உணடு, ஒவ்வொரு ஜீவராசிக்கும் ஒவ்வொருவிதமான அறிவு இருக்கிறது. இதுதான் தொல்காப்பியர் முதற்கொண்டு பல அறிஞர்கள் ஒரறிவு. ஈறறிவு மூன்றறிவு, நாலறிவு, ஐந்தறிவு ஆறறிவு உண்டு என்றும் மனிதனுக்கு மட்டுமே ஆறறிவாக பகுத்தறிவு (யூதா. 22, ரோ, 12:2) உண்டு என்றும் சொல்லியிருக்கிறார்கள், இப்படியாய் தகுதிகேற்ற படைப்புகேற்ற **உலக அறிவு உணர்வு** போன்றவைகளின் பிறப்பிடமான ஆத்துமா சகல ஜீவராசிகளுக்கும் படைப்பின்போதே தேவன் வைத்திருக்கிறார். எனவே மிருகங்களுக்கு ஆத்மா உண்டென்று இது மண்ணான சரீரத்தோடு இணைந்திருக்கிறது என்றும் அறிகிறோம். It is not having God’s Concious, but having concious according to the degree awarded in their souls by God. ஐந்தாம் நாளும் ஆறாம் நாளும் ஒன்றுமில்லாமல் இருந்து இவைகளை சிருஷ்டித்தார் என்று ஆதி 1:20-25லும் மண்ணினால் உருவாக்கினார் என்று ஆதி 2:9யிலும் சொல்லியிருப்பதால் இந்த கூற்று இன்னும் உறுதியாகிறது. சிருஷ்டிக்கப்பட்டது ஆத்மா: உருவாக்கப்பட்டது சரீரம்)

இந்த நிலையில் மூல பாஷையில் ஆவி ஆத்மா பற்றியுள்ளதை பார்ப்போம், நமது மலையாள பாஷையில் ஆவி என்ற வார்த்தை இல்லாததால் பரிசுத்த அவி என்பதை பரிசுத்த ஆத்மா என்று எழுதப்பட்டுள்ளது. தமிழ் பைபிள் போல ஆவி ஆத்மா என்று பிரித்து எழுதாமல் எல்லாவற்றையுமே ஆத்மா என்றே எழுதியிருக்கிறார்கள். எபிரேயு பாஷையில் (spirit) ஆவி என்பதற்கு RUWACH என்று உள்ளது. இது ஆவி spirit (ஆத்துமா, சிந்தனை, மனம்) Wind காற்று Breath சுவாசம் Life (உயிர்) உள்ளம் போன்ற அர்த்தங்கள் கொண்டவை **கிரேக்க பாஷையில்** வரும் NEPHESH என்பதும் கிரேக்க பாஷையில் PSUCHE என்பதும் **ஆத்மாவிற்காக** எழுதப்பட்டிருநதாலும் இந்த வார்த்தைகள் இருதயம் ஜீவன் உயிர் மனது உள்ளம் உணர்வு போன்ற அர்த்தங்கள் கொண்டவை. இவைகளை நன்கு தியானித்தால் இந்த இரு மொழிகளும் இந்த வார்த்தைகளையும் ஆவிக்கும் உபயோகிக்கலாம். அந்தந்த இடங்களுக்கு ஏற்றபடி இவைகளை புரிந்துகொள்ள வைப்பவர் தான் பரிசுத்த ஆவியானவர். please refer STRONGS comprehensive of the Bible together with dictioneries of the Hebrew and Greek words of the original. with references to the English words) மட்டுமல்ல வேதத்தில் **ஆவி** என்றால் **வல்லமை மகிமை, அதிகாரம்,** மாட்சிமை என்று பொருள் (மல் 2:15) **ஆவியானவர்** என்றால் ஒரு தனிப்பட்ட ஆட்தத்துவமுள்ள தேவனைக் குறிக்கிறது, ஆனால் சில இடங்களில் ஆவியானவர் என்பது மாறி மாறியும் தமிழ் மொழி வேத்தில் வரும்போது அந்தந்த இடத்திற்கு ஏற்றாற்போல் புரிந்துகொள்ளுதல் அவசியம்.

இந்த கண்ணோட்டத்தில் (பிர. 3:19-21)ஐ தியானிக்கலாம், **மனிதனின் சரீரமும் மிருகத்தின் சரீரமும் மண்ணுக்கு போகிறது. மனிதனுடைய ஆவி** தேனோடே இணைத்துள்ள **ஆத்மாவோடு** சரீரத்தைவிட்டு **தேவனோடு போகிறது.** (பிர 12:7) லூக் 12:20 ராஜா 17:21, யாக் 2:26) அப்படியே **ஆவியில்லாத** அத்துமா மட்டும் உள்ள மிருகங்களின் சரீரத்தோடு அதன் ஆத்மா தாழ பூமியில் இறங்கி (1 முதல் 5 அறிவுக்கு உள்ளிருப்பது) **சரீரத்தோடே** போகிறது. இங்கே RUWACH என்ற வார்த்தையே இருப்பதால் மேலே சொன்னபடி **எபிரேயு** பாஷையில் இது ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் எடுத்துக்கொள்ளலாம் என்பதால் மொழிபெயர்ப்பு செய்தவர்கள் **மிருகங்களுடைய ஆவி** என்று எழுதிவிட்டார்கள். **மிருகங்களுக்கு ஆவி இல்லை** என்ற சத்தியம் புரிந்துவிட்டால் **இது மொழிபெயர்ப்பு பிழை** என்று உணர்ந்து உண்மையை அறிய மட்டுமல்ல **ஆவி என்பது உயிர் அல்ல என்ற சத்தியமும்** புரிய **வேண்டும்.** ஆக அடிப்படை சத்தியம் புரியாமல் தங்களுடைய சொந்த அறிவை வைத்து வியாக்கியானம் பண்ணி மக்களை தவறாய் நடத்தும் கள்ள உபதேச கூட்டம் மனந்திரும்ப ஜெபிப்போம்.

**என் ஆத்மா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது,** தாவீதின் நிலை நமக்கு இல்லாதபடிக்கு தேவ வசனத்தின்படி **உயிர்பிக்கபட்ட** எழுப்புதல் கிடைக்க ஆவியானவரின் ஆளுகைக்கு விட்டுக்கொடுத்து (யோ. 15:13-15, 14:26) சத்தியத்தின் நிலைத்திருப்போம். நித்தியத்தில் இணைந்திடுவோம். ஆமென்.



# இந்திய தேசத்தின் 75வது சுதந்திர தின வாழ்த்துகள்



இயேசுவைச் சேர்ந்தவர்கள், அவரோடு தேசத்தையும் அன்போடு தழுவிக்கொள்வார்கள் - ஜான் பைபர்

இயேசுவும் வேதாகமும் இல்லாமல் ஒரு தேசத்தைச் சரியாக ஆட்சிசெய்வது சாத்தியமில்லை - ஜார்ஜ் வாஷிங்டன்

கிறிஸ்தவும் தேசத்தோடு சிறந்த நட்புடன் இருப்பதற்குக் காரணம் கிறிஸ்தவம்தான் மக்களின் மனதை நல்ல மாற்றத்திற்கு உட்படுத்துகிறது. - தாமஸ் ஜெஃபர்சன்

*சகோதரரே நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள். இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல் அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள் (கலா. 5:13)*

**AUGUST-2021**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.